# <u>ஜெயங்கொண்டம் நகராட்சி</u>

<table>
<tr><th>DATE OF MEETING OF THE COUNCIL</th><th>MCR NO</th><th>SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA</th><th>DECISION OF THE COUNCIL</th></tr>
<tr><td></td><td></td><td>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29.10.2021 ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை,<br><br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி.</td><td></td></tr>
<tr><td>29.10.2021</td><td>433</td><td><u>பொருள் : 1</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் 10/2021 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.10.2021</td><td>434</td><td><u>பொருள் : 2</u><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை (நிலை) எண்..90 நாள்.27.10.2021ன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சியில் வார்டு எண்.05 பாப்பாங்குளம் பகுதியில் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.42.30 இலட்சத்தினை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22ன் (KNMT) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும்.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண் : 5045/2021/இ1</u></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.10.2021</td><td>435</td><td><u>பொருள் : 3</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது அலுவலக தொலைபேசி செய்தியின்படி, ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட நீர்நிலைகளை மேம்பாடு செய்தல் பணிகளுக்கு ரூ.320.00 இலட்சத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற அனுப்பி வைத்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண்.1 புது ஏரியினை மேம்பாடு செய்தல்.</td><td>155.00</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண்.3 ஆலடி ஏரியினை மேம்பாடு செய்தல்.</td><td>165.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>320.00</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு பிரேரணை அனுப்பி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22ன் (KNMT) கீழ் முழு மானியமாக நிதி ஒதுக்கீடு பெற்று பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 5330 / 2021 / இ1** | |
| 29.10.2021 | 436 | **பொருள் : 4**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனத்தின் (பதிவு எண்.TN-61 R 4719) ஆல் ஆயில் சர்வீஸ், பிரேக் வேலைகள், ஸ்டீரிங் வேலைகள், கிங்பின் ரிவிங், கிரவுன் சர்வீஸ் மற்றும் இதர பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி பெற்ற பணி மனையில் விலைப்புள்ளியின்படி, ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2 பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் : 5450/2021/இ1** | அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2021 | 437 | **பொருள் : 5**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனத்தின் (பதிவு எண்.TN-61 R 4776) கிளச் பிளேட் வேலைகள், புதிய டோர் கிளாஸ் , டோர் வைன்டிங் வேலைகள் மற்றும் இதர பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி பெற்ற பணி மனையில் விலைப்புள்ளியின்படி, ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.24,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழ<br>**ந.க.எண் : 5451/2021/இ1** | அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2021 | 438 | **பொருள் : 6**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி அண்ணா சிலை அருகில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுய உதவி குழு பணியாளர்களுக்கு 10/2021–ம் மாதம் முதல் 03/2022–ம் மாதம் வரை ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கும் மற்றும் தொகையினை வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1219 / 2014 / அ3** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.10.2021 | 439 | **<u>பொருள் : 7</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி அண்ணா சிலை அருகில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 10/2021–ம் மாதம் முதல் 03/2022–ம் மாதம் வரை சமைப்பதற்கு தேவையான அரிசி, பால், மளிகை பொருட்கள் மற்றும் சிலிண்டர் வாங்கி உபயோகிக்க ஆகும் ஊதியம் ரூ15.00 இலட்சத்திற்கும் மற்றும் தொகையினை வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 1219 / 2014 / அ3</u>** | அனுமதிக்கப்பட்டது |